பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 11 2025 FRIDAY 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்திய தொழில் கூட்டமைப்பின் 30வது உச்சி மாநாட்டை குடியரசுத்துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று விசாகப்பட்டினத்தில் தொடங்கி வைக்கிறார்.
- அரசு மற்றும் தனியார் ஒத்துழைப்புடன் நாடுமுழுவதும் 100 புதிய சைனிக் பள்ளிகளை நிறுவ அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 9 ஆயிரத்து 72 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பிஜேபி தெரிவித்துள்ளது.
- இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

இந்திய தொழில் கூட்டமைப்பின் 30வது உச்சி மாநாட்டை குடியரசுத்துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று விசாகப்பட்டினத்தில் தொடங்கி வைக்கிறார்.

இந்திய தொழில்கூட்டமைப்பும் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையும், ஆந்திரப் பிரதேச அரசும் இணைந்து நடத்துகின்றன.

இதில் வர்த்தகம் மற்றும் முதலீட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க, சிந்தனையாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில் துறையின் தலைவர்கள் மற்றும் உலகளாவிய பங்காளர்களை ஒன்றிணைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில், 45 நாடுகளைச் சேர்ந்த 300க்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகள் உட்பட மொத்தம் 2500 பேர் கலந்துகொள்ள உள்ளனர்

<<<<<<>>>>>>

அரசு மற்றும் தனியார் ஒத்துழைப்புடன் நாடுமுழுவதும் 100 புதிய சைனிக் பள்ளிகளை நிறுவ அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் சைனிக் பள்ளியை நேற்று காணொலி வாயிலாக திறந்தவைத்து பேசிய அவர், இதுபோன்ற பள்ளிகள் இளைய தலைமுறையினர் இந்திய ராணுவத்தில் சேவையாற்ற வழி வகுக்கும் என்று குறிப்பிட்டார்.

தில்லியில் நடந்த கார் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்குக் காரணமானவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

அனைவருக்கும் சமமான, நிலையான வேலைச் சூழலை உருவாக்க புதிய தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை உதவும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

நேற்று புது தில்லியில் நடைபெற்ற இதற்கான வரைவு நகல் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், இந்தக் கொள்கை சிறப்பாக அமைய, தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடம் இருந்து ஆலோசனைகளையும் வரவேற்பதாக கூறினார்,

பல கட்ட ஆலோசனைகள் மூலம் கிடைக்கும் நல்ல கருத்துக்களைச் சேர்த்த பிறகே, இந்தக் கொள்கை இறுதி செய்யப்படும் என்றும் அமைச்சர் உறுதி அளித்தார்.

இந்தக் கூட்டத்தில் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு மற்றும் மத்திய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்

<<<<<<>>>>>>

பொதுத்துறை நிறுவனங்களிடையே ஆரோக்கியமான போட்டி தேவை என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் நிலக்கரித் துறை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் பேசிய அவர், இந்த ஆண்டுக்கான உற்பத்தி இலக்குகளை அடைய வேண்டும் என்றும், ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் வளர்ச்சியைப் பராமரிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

உற்பத்தி, லாபம், தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் செயல்திறன் ஆகியவற்றில் சிறந்து விளங்க பொதுத்துறை நிறுவனங்கள் போட்டி போட்டு செயல்படவேண்டும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். மேலும், இந்திய நிலக்கரி நிறுவனம் தனது நிரந்தர ஊழியர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கூடுதல் தனிநபர் விபத்து காப்பீடு வழங்கும் முயற்சியையும் அவர் பாராட்டினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் இறுதியில் நிலக்கரித் துறையின் விரிவான கண்ணோட்டத்தை வழங்கும் நூல் ஒன்றையும் அமைச்சர் வெளியிட்டார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 9 ஆயிரத்து 72 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர்கள் செவிலியர் பணியிடங்கள் முறைப்படி நிரப்பப்பட்டுள்ளதாக கூறினார்.

புதிதாக 4 ஆயிரத்து 337 மருத்துவப் பணியிடங்களும், ஆயிரத்து 91 மருந்தாளுநர் பணியிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆறு இடங்களில் புதிதாக மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக, புதிய மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டுப் படிவத்தில் பூர்த்தி செய்யத் தேவையான கடந்த 2002, 2005ஆம் ஆண்டு விவரங்களை வாக்காளர்கள் அறிந்து கொள்ளும் வகையில், தேர்தல் ஆணையம் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

www.voters.eci.gov.in என்ற இணையதளத்தில் மாநிலத்தின் பெயர், வாக்காளர் எண் போன்ற விவரங்களை பயன்படுத்தி, தங்களது விவரங்களை பெற்றுக் கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

வாக்காளரின் பெயர், தொகுதி பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டும் வாக்காளர்கள் தங்களது விவரங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், குவைத்தில் பாதிக்கப்பட்ட மீனவர் ஒருவரை மத்திய அரசு மீட்டதோடு, அவரது குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகையையும் பெற்றுத் தந்ததாக கூறினார்.

இந்துக்களின் புனித தலமாக விளங்கும் ராமேஸ்வரத்திற்கு ஏராளமான திட்டங்களை மத்திய அரசு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் இன்னும் ஏராளமான மகளிருக்கு உரிமைத்தொகை கிடைக்கவில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

<<<<<<>>>>>>

வந்தேமாதரம் பாடலின் 150வது ஆண்டுவிழா, நாடுமுழுவதும் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, ராமநாதபுரம் மாவட்டம், அரிச்சல்முனை பகுதியில், தேசிய மாணவர் படையின் சார்பில் இதற்கான விழா நேற்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – கார்த்திகேயன் 58 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் நேற்று மின்வாரிய ஊழியர்களிடம் விசாரணை மேற்கொண்டனர்.

சம்பவம் நடைபெற்ற போது, மின்வெட்டு நிகழ்ந்ததாக கூறும் குற்றச்சாட்டு குறித்து அவர்களிடம் விசாரிக்கப்பட்டது.

கூட்ட நெரிசலின் போது உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை மீட்பதற்காக வந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களிடமும் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

<<<<<<>>>>>>

இருவரிச் செய்திகள்

ஜெர்மனியில் உள்ள Hamburg நகரில் கழிவுநீர் மாதிரிகளில் போலியோ வைரஸ் வகை கண்டறியப்பட்டுள்ளதாக ஐரோப்பிய நோய் தடுப்பு கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தானில் நிகழ்ந்த இரண்டு தற்கொலைப்படை தீவிரவாத தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் காரணம் என்று அந்நாடு குற்றம் சாட்டியுள்ளது.

<<<<<<>>>>>>

புனே - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நேற்று நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் நேற்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

<<<<<<>>>>>>

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருகே 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கம்பத்துவீரன் கோவில் திருவிழா நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>>

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட நகராட்சி நடுநிலைப் பள்ளியில் நாளை சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் மகளிர் கல்லூரி வளாகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான விழிப்புணர்வு இயக்கத்தை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது

கொல்கத்தா ஈடன் கார்டனில் இப்போட்டி காலை மணி 9.30-தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-11 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரில் Jia Heng Jason The-ஐ வென்றார்.

<<<<<<>>>>>>

கோலாலம்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சாய் கார்த்திக் – தாய்லாந்தின் Thantub இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-4 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Anthony - Gunawan இணையை வென்றது.

<<<<<<>>>>>>